**தலைப்பு 12 – தேசிய கல்வி ஆணைக்குழு**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய கல்வி ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன்கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 மே 21 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 ஒக்தோபர் 05 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர, 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிக்கூற்றுக்கள் தேசிய கல்வி ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்பட்டது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்த அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின்போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு ஆணைக்குழுவின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

**(அ) வைப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் வைப்புக்கள் கணக்கு தொடர்பான கூற்றில் ஆணைக்குழுவின் புத்தகங்களின் பிரகாரம் மீதி ரூபா 2,450 ஆக காணப்பட்டதுடன் திறைசேரி புத்தகங்களின் பிரகாரம் அந்த மீதி ரூபா 32,450 ஆக காணப்பட்டதனால் ரூபா 30,000 வேறுபாடொன்று காணப்பட்டது. | இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் வைப்புக்கள் கணக்கின் மீதி ரூபா 30,000.00 தவறுதலாக அறிக்கையிடப்படாமல் உள்ளதாக | வருடத்தின் இறுதியில் ஆணைக்குழுவின் வைப்புக்கள் கணக்கு தொடர்பான கூற்றின் மீதி திறைசேரி புத்தகங்களின் மீதியுடன் இணக்கப்பட்டிருக்க வேண்டும். |

**(ஆ) ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்கள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2020 ஆம் ஆண்டிலே கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 49,523 மனைப் பொருட்களின் பெறுமதி தவறுதலாக தொடர்பால் உபகரணங்களின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது. | இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்படும் போது இடம்பெற்ற பிழையின் காரணமாக தொடர்பாடல் உபகரணங்களின் கீழ் காட்டப்பட்டிருந்தது. | சரியான வகைப்படுத்தலின் கீழ் சொத்துக்கள் கணக்கிடப்பட வேண்டும். |
| (ii) | நிதி நிலைமை தொடர்பான கூற்றில் ரூபா 45,156,061 ஆன நிலையான சொத்துக்கள் மீதி திறைசேரி அச்சுக் குறிப்பின் பிரகாரம் ரூபா 45,018,493 ஆக காட்டப்பட்டுள்ளதால் ரூபா 137,568 வேறுபாடொன்று காணப்பட்டது. | செப்தெம்பரிலிருந்து திசெம்பர் 31 ஆந் திகதி வரை கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் பெறுமதி செலவுத் தலைப்பு 335 இல் நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. அந்த தொகை 2020 சனவரி மாதத்திலே நாளதுவரையாக்கப்பட்டதுடன் அப்போது அந்தத் தொகை திறைசேரி அச்சுக் குறிப்பில் அறிக்கையிடப்பட்டிருக்க வில்லை. | ஆணைக்குழுவின் நிலையான சொத்துக்கள் மீதி, திறைசேரியின் அச்சுக் குறிப்பு மீதியுடன் இணங்க வேண்டும். |

**(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | நிதிப்பிரமாணம் 214 இன் பிரகாரம் கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து கடப்பாடு மற்றும் பொறுப்புக்கள் பதிவேடு முறையாக நாளதுவரையாக் கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) நிதிப்பிரமாணம் 571 இன் பிரகாரம் பொது வைப்புக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து பொது வைப்புக்கள் பதிவேடு நாளதுவரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**(ஈ) சட்டம், ஒழுங்கு, மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டம், ஒழுங்கு, பிரமாணம் ஆகியவற்றிற்கான கவனத்திற்கு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப் பிரமாணம் 756(6) | வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2021 மார்ச் 31 க்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2021 யூலை 31 ஆந் திகதியிலும் உரிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட் தொற்று நிலைமையின் காரணமாக நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இயங்காததன் காரணமாக வருடாந்த பொருள் மெய்மையாய்வை தொடர்ந்து மேற்கொண்டிருக்க வேண்டிய பெர்ருட்களை நீக்கும் நடவடிக்கையும் மேற்கொள்ள முடியாது போனது. அதன் காரணமாக உரிய அறிக்கையை கணக்காய்விற்கு சமர்ப்பிக்க முடியாது போனது என்பதாக | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்று நிருபத்தின் 3.1 ஆம் பிரிவு | எல்லா எரிபொருள் பரீசீலனையின் பின்னர் 12 மாத கால எல்லையின் பின்னர் அல்லது 25,000 கிலோ மீற்றர் தூர அளவு பயணித்த பின்னர் இல்லது என்ஜினோடு தொடர்புடைய பிரதான திருத்த வேலையின் பின்னர் அல்லது மீண்டும் எரிபொருள் பரிசீலனையொன்று | ஆணைக்குழுவின் வாகனங்களில் எரிபொருள் எரிவில் அசாதாரணமான வேறுபாடொன்று காணப்படாததன் காரணமாக எரிபொருள் எரிவு தொடர்பாக பரிசீலனை மேற்கொள்ளப்படவில்லை என்பதுடன் எதிர்காலத்தில் அந்த பரிசீலனைகளை காலத்திற்கேற்ப | சுற்றுநிருபத்தின் பிரகாரம் எரிபொருள் பரிசீலனை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மேற்கொள்ள வேண்டிய போதிலும் ஆணைக்குழுவிடம் காணப்படுகின்ற வாகனங்களுக்கு எரிபொருள் பரிசீலனையொன்று மேற்கொண்டிருக்க வில்லை. | மேற்கொள்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது என்பதாக | |
| (iii) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க அரச நிர்வாகச் சுற்று நிருபம் | மனிதவள அபிவிருத்தி திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்க வில்லை. | மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக | அரச நிர்வாக சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் நோக்கம் மற்றும் அதிஷ்டானத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒதுக்கப்பட்ட தேறிய ஏற்பாடுகளில் உபயோக்கபடுத்தப்படாத செலவு விடயங்கள் 7 க்கு உரிய சேமிப்புக்களின் பெறுமதி ரூபா 1,491,775 ஆக காணப்பட்டதுடன் அது தேறிய ஏற்பாட்டில் நூற்றிற்கு 25 இல் இருந்து நூற்றிற்கு 100 வரையான வீச்சில் காணப்பட்டது. | கொவிட் தொற்று நிலைமை காரணமாக அலுவலக நடவடிக்கைகள் தொடர்ச்சியாக இயங்காததன் காரணமாக வருடம் முழுவதும் ஒதுக்கி வைக்கப்பட்டிருந்த மீண்டெழும் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டதாக | ஆணைக்குழுவின் நோக்கம் மற்றும் அதிஷ்டானத்தை அண்மிக்கக்கூடிய வகையில் ஏற்பாடுகளை உபயோகப்படுத்திக் கொள்ள வேண்டும். |

## 2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உட்படல்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்குரிய மொத்தம் ரூபா 161,110 பொறுப்புக்கள் உருப்படிகள் 02, பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்டிருந்த பொறுப்புக்கள் தாமத கோளாறு ஒன்றின் காரணமாக பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் குறிப்பிடுவதற்கு முடியாது போனது என்பதாக | வருடத்திற்குரிய அனைத்து பொறுப்புக்களும் பொறுப்புக்கள் தொடர்பான கூற்றில் உள்ளடக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 தொலைநோக்கு மற்றும் செயற்பணி

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| ගගஆணைக்குழுவினால் 1992 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட கல்விக் கொள்கைக்கான பிரேரணையை அடிப்படையாகக் கொண்டு 1997 ஆம் ஆண்டில் சனாதிபதியினால் கல்விக் கொள்கையொன்று பிரகடனப்படுத்தப்பட்டிருந்த போதிலும் அதன் பின்னர் சமர்ப்பிக்கப்பட்ட கல்விக் கொள்கைக்கான பிரேரணைகளை கொள்கை ரீதியாக பிரகடனப்படுத்தியிருக்க வில்லை. | இந்த ஆணைக்குழுவின் வேலை கொள்கை பிரேரணைகளை தயாரித்து சனாதிபதிக்கு பரிந்துரைகளை மேற்கொள்வது மாத்திரமேயாகும் என்பதுடன் அதை கொள்கையொன்றாக பிரகடனப்படுத்துவதை மேற்கொள்வது சனாதிபதியின் மூலமாகும். | ஆணைக் குழுவினால் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைகளை அடிப்படையாகக் கொண்டு கல்வி கொள்கைக்கான பிரேரணைகளை கொள்கை ரீதியாக பிரகடனப்படுத்து வதற்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 3.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 2/2020 ஆம் இலக்க இலக்க அரச நிதிச் சுற்றுநிருபத்தின் 10.2 பந்தியின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட்டு கொண்டிருப்பதாக | அரச நிதிச் சுற்று நிருபத்தின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். |

### 3.3 பெறுகைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| தேசிய கல்வி ஆணைக்குழுவின் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவு விடயத்தின் கீழ் 2020 வருடத்திற்குரிய 05 ஆராய்ச்சி பிரேரணைகளுக்காக மீளாய்வுக் குழு அங்கீகாரம் 2021 பெப்ரவரி 10 ஆந் திகதி பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்த போதிலும் அந்த அங்கீகாரத்திற்கு முன்னர் அவ்வாறென்றால் 2020 திசெம்பர் 14 ஆந் திகதி ரூபா 120,000 வீதம் ரூபா 600,000 திறன்களுடனான விசேடமானவர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது. அத்தோடு திறன்களுடனான விசேடமானவர்களை தெரிவு செய்யும் போது பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டிருக்கவில்லை. | ஆராய்ச்சி பிரேரணைகளுக்காக மீளாய்வுக் குழு கூட்டம் நடாத்தப்படுவதற்கு தினமொன்றை ஒதுக்கிக் கொள்வதற்கு முடியாததன் அடிப்படையில் அந்த குழுவின் பரிந்துரைக்கு இணங்கக் கூடிய வகையில் திருத்தங்களை மேற்கொள்வதற்கு இணங்குவதன் அடிப்படையின் கீழ் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு தலைவரின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதாக | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டியதுடன் முறையான அங்கீகாரத்தின் அடிப்படையில் கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கத்தை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்பு | ஆணைக்குழுவின் கருத்துரைகள் | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டிற்கான நிகழ்ச்சி நிரல் தொடர்பாக நிறுவனம் அறிந்து நிறுவனத்திற்கு உரிய மேற்கொள்ள முடியுமான நிலைபேறான அபிவிருத்தியின் இலக்கு மற்றும் நோக்கம் என்பன அடையாளம் கண்டிருந்த போதிலும் அந்த இலக்கை அடைய வேண்டிய திருப்பு முனையையும் அந்த இலக்கை அடைவதை அளப்பதற்கான குறிகாட்டியையும் அடையாளங் காண்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கம் மற்றும் இலக்கை அடைந்து கொள்வதை அளந்து பார்ப்ப தற்கான அளவு கோள் உரித்தாவது, இந்த கொள்கையை நடைமுறைப்படுத்து கின்ற நிறுவனத்தின் மூலம் என்பதனால் இந்த நிறுவனம் அது தொடர்பான குறிகாட்டியை அடையாளங் | கொள்கைகளை வகுக்கும் விடயங்களின் போது நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கம் மற்றும் இலக்குக்கு கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | காண்பது தேவையற்றது என்பது எனது அவதானமாகும். கொள்கை வகுக்கும் விடயங்களின் போது இந்த நோக்கம் தொடர்பான கவனம் மேற்கொள்ளப்படும் என மேலும் கூற விரும்புகின்றேன். | |

**5. நல்லாட்சி**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) பிரிவின் பிரகாரம் அனைத்து அமைப்புக்களிலும் உள்ளக கணக்காய்வை மேற்கொள்வதற்காக அந்த அமைப்பின் கட்டுப்பாட்டு சபையினால் உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் ஆணைக்குழுவிற்கான உள்ளக கணக்காய்வாளர் ஒருவரை நியமித்து உள்ளக கணக்காய்வு அலகொன்றை ஸ்தாபித்திருக்கவில்லை.<br>அவ்வாறே வரைவு அமைச்சின் உள்ளக கணக்காய்வு பிரிவின் ஊடாக கணக்காய்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்த போதிலும் அறிக்கையிடும் திகதி வரையும் அந்த நடவடிக்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருக்க வில்லை. | ஆணைக்குழுவிற்கான தனியான உள்ளக கணக்காய்வு அலகொன்றை ஸ்தாபிப்பதற்காக உரிய வேலைகள் வரைபு அமைச்சின் உள்ளக கணக்காய்வுப் பிரிவின் ஊடாக கணக்காய்வொன்றை மேற்கொள்வதற்காக வேண்டுகோள் ஒன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதாக | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 6. மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|
| ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை 45 ஆக உள்ளதோடு உண்மையான பதவியணியினர்கள் 34 ஆக உள்ளதனால் மேலும் 11 வெற்றிடங்கள் காணப்பட்டது. | பதவிகளுக்காக எதிர்காலத்தில் ஆட்சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கான திட்டங்கள் இடம் பெற்றுக் கொண்டிருப்பதாக | 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 40(1) பிரிவின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |